**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ‘‘பிலிசரு’’ செயற்திட்டத்தின் மூலம் வெகுமதியாக பெறப்பட்ட ரூபா 499,991 தொகையான கூட்டெரு சளிக்கும் இயந்திரத்தின் (Compost Sieving Machine) பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | கூட்டெரு சளிக்கும் இயந்திரம் வெகுமதியொன்றாக 2018 யூலை 20 ஆந் திகதி கிடைத்த போதிலும், அதன் பெறுமதி உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கையானது எமக்கு 2019 பெப்ரவரி 12 ஆந் திகதியே கிடைத்துள்ளது என்றமையால், கணக்கு வைப்பதற்கு பெறுமதி இல்லாதிருந்தமையால் அடுத்த வருடத்தில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபைக்கு உரித்தற்ற முன்பள்ளி நிரமாணம் மற்றும் பழுதுபார்த்தல்களுக்கு முன்னைய வருடங்களில் மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,799,149 தொகை சபையின் நிலை யான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | அடுத்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடங்களை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (iii) | சபையினால் பேணிச் செல்லப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 908,800 பெறுமதியான உழவு இயந்திரமொன்று மற்றும் டிரேலர் ஆகியவை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். | பரிசோதித்துப் பார்த்து தேவைப்படும் எனின் எதரிகாலத்தில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களின் பயன்பாட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின பிரகாரம் மீதிகளுக்கிடையே இணங்காமைகளின் கூட்டுத்தொகை ரூபா 22,157,667 ஆகும். | குறித்த மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா | பெற வேண்டிய வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன். |

| | |
|---|---|
| 10,481,602 காணப்பட்டதுடன், அவற்றுள் 05 வருடத்தினை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,198,102 ஆகும். | எடுக்கப்பட வேண்டும். |

**(ii) செலுத்த வேண்டிய வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியல் உள்ளபடியாக செலுத்த வேண்டிய 07 கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 29,856,032 ஆக இருந்ததுடன், அவற்றுள் 05 வருடத்தினை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,176,441 ஆகும். | பெற வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் கடன்பட்டோர் மீதியிலுள்ள பதிவழிக்ககூடிய கடன்கொடுத்தோர் மீதிகளை பதிவழிப்பதறகு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 196,556,787 கூட்டுப் பெறுமதியுடைய 08 விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை ல. | நிதிக்கூற்றுக்களிலு ள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | உரிய பதிவேடுகள், மீதி உறுதிப்படுத்தல்கள், மதிப்பாய்வு சபையின் அறிக்கைகள் மற்றும் உரித்துறுதிகள் நாளதுவரையாக பேணப்படுவதாகவும், கணக்காய்விற்கு தேவையான பதிவேடுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம்** | | | |
| **(i)** | விதி இலக்கம் 136 | சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான குத்தகைக்கு வழங்கப்படும் அல்லது வாடகைக்கு வழங்கப்படும் சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரி வருமானங்களை சிட்டைப்படுத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான குத்தகைக்கு வழங்கப்படும் அல்லது வாடகைக்கு வழங்கப்படும் சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரி வருமானங்களை பட்டியலிட்டு எதிர்வரும் வருடத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| **(ii)** | விதி இலக்கம் 150(4) | அறவிடப்பட வேண்டிய குத்தகை பணத்தினை அறவிடுவதற்கு செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் குறித்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் அறவிடப்பட வேண்டிய குத்தகை பணத்தினை அறவிடுவதற்கு நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| **(iii)** | விதி இலக்கம் 158 | மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக அந்த வரியை செலுத்த வேண்டியவர்களின் அசையும், அசையாச் | அதிகாரச்சட்டத்தின் குறித்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரியை புறக்கணிப்பவர்களின் அசையும் சொத்துக்களை தடை செய்து நிலுவைப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சொத்துக்களைத் தடை செய்து நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| **(ஆ)** | **1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | |
| **(i)** | விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்க வில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெற வேண்டும். | அனைத்து நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளினூடாக பரிசோதிக்கப்படுகின்றது. உள்ளக கட்டுப்பாட் முறைமைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| **(ii)** | விதி இலக்கம் 33 | வீத வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்களின் பட்டியலும் சொத்துக்களைத் தடை செய்யும் ஆணைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டு சொத்து தடை செய்யும் பிடியாணைகள் ஒவ்வொரு காலாண்டினதும் இறுதியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட விதிகளுக்குகேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீத வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்களின் பட்டியலும் சொத்துக்களைத் தடை செய்யும் ஆணைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டு சொத்து தடை செய்யும் பிடியாணைகள் ஒவ்வொரு காலாண்டினதும் இறுதியில் தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ii)** | விதி இலக்கம் 69 | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) பிரிவின் கீழான | பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட | காணிகளை வறிபனை செய்வதற்காக பீ.எஸ்.26C மாதிரியின் |

| | | |
|---|---|---|
| | ஏற்பாடுகளின் பிரகாரம் ஏலமிடப்பட்ட காணிகளுக்காக பீ.எஸ்.26C மாதிரியின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | பிரகாரம் பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,247,648 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,499,271 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 1,284 | 1,343 | 1,130 | 2,306 | 1,284 | 1,272 | 3,121 | 2,194 |
| வாடகை | 13,394 | 1,050 | 8,548 | 7,272 | 10,500 | 9,116 | 8,166 | 15,348 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,301 | 4,589 | 4,589 | - | 5,001 | 3,749 | 3,749 | - |
| ஏனைய வருமானம் | 83,645 | 84,021 | 69,641 | 59,933 | 76,566 | 56,851 | 50,803 | 45,832 |
| மொத்தம் | 102,624 | 91,003 | 83,908 | 69,511 | 93,351 | 70,988 | 65,839 | 63,374 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டிற்கான பட்டியலிடல்களுடன் கடந்த வருடங்களில் நிலுவை வருமானத்துடன் பெற வேண்டிய முழு வரிப் பணம் மற்றும் வரி வருமானத்தில் 32 சதவீதம், 52 சதவீதம் மற்றும் 53 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையாகவுள்ள வருமானத்தை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 2.2.3 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 1,659,510 ஆக உள்ளதோடு அந்த நிலுவையில் 01 வருடத்திற்கும் கூடிய 05 வருடத்திற்குட்பட்ட நிலுவை ரூபா 489,213 ஆகவும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 791,645 ஆகவும் உள்ளது. மேலும் மொத்த நிலுவையினுள் ரூபா 10,000 இனை விஞ்சிய 26 அலகுகளின் ரூபா 464,393 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | நிலுவை வீதவரி துரிதமாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக இது வரையிலும் வருமான் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் வருமானப் பரிசோதகர்களின் மூலம் நிலுவை வருமானம் அறவிடப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | 05 வருடங்களுக்கு ஒரு தடவை பிரதான மதிப்பீடொன்றினை மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2006 ஆம் ஆண்டிடின் பின்னர் 2018 ஆம் ஆண்டு வரையிலும் பிரதான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதவரி மதிப்பீட்டினை உரிய காலத்தில மேற்கொள்ள வேண்டும். | 2006 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பின்னர் வீதவரி மதிப்பீட்டு பணிகள் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அந்த மதிப்பீட்டு பணிகள் இது வரையிலும் மேற்கொள்ளப்படுவதுடன், |

| | | |
|---|---|---|
| | | தற்போது வீதவரி அளவீட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. விலைமதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து ஆதன மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்த பின்னர் மதிப்பீட்டு பெறுமதிகளுக்குரிய வீதவரிக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ஏக்கர் வரி நிலுவை வரி நிலுவை ரூபா 511,728 ஆக உள்ளபோது அந்த நிலுவையில் ரூபா 145,826 தொகையானது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் ரூபா 303,989 தொகையானது 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்திலிருந்தும் அறவிட வேண்டியதாகும். | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை அறவிட்டு ஆவணங்களை இற்றைப்படுத்திக் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரையில் இந்த ஏக்கர் வரி நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

### 2.2.5 வாடகை மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் கடை வாடகை மற்றும் குத்தகையின் மொத்த நிலுவை ரூபா 3,073,909 ஆன போதும், அந்த நிலுவையில் ரூபா 49,625 தொகையான கடை வாடகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், ரூபா 93,670 தொகையானது 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்திலிருந்தும் அறவிடப்பட வேண்டியவையாகும். மேலும், புதிய வியாபார தொகுதியின் | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடை வாடகை மதிப்பீட்டு வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப புதிய ஒப்பந்தங்கள் பெறப்பட்டு நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 10 கடைகளிலிருந்து ரூபா 2,188,207 தொகையான கடை வாடகை நிலுவை வாடகை தொகையொன்று காணப்பட்டது. | | |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற்றுக் கொள்ள வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 28,348,827 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 35,833,101 உம் ஆகும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், தயாரிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டத்தின் செயன்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அதன் செயன்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டம் புத்தளம் பிரதேச சபையிளால் தயாரிக்கப்பட்டுள்ளது. செயன்முன்னேற்றத்தினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை எல்லையினுள் நாளொன்றில் சேர்கின்ற வகைப்படுத்தப்படாத குப்பைகள் 03 டிராக்டர்களில் 01 கூட்டெரு நிலைத்திறகும், எஞ்சியவை 02 சபைக்கு சொந்தமான திறந்த இடமொன்றிற்கு அகற்றப்படுகின்றது. கூட்டெரு நிலையத்தினை நிரமாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் ''பிலிசரு'' செயற்திட்டத்தின் கீழ் காசாக ரூபா 5,705,818 தொகையும், ரூபா 499,991 பெறுமதியான சலிக்கும் இயந்திரமும், வெகுமதியாக கிடைக்கப்பெற்றிருந்தது. அவ்வாறே சபையின் நிதியத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,547,181 தொகையும், அரைக்கும் இயந்திரம் அல்லது மோட்டர் ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 111,385 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த இயந்திரம் 2019 மே 20 ஆந் திகதி வரையிலும் விளைவற்ற காணப்பட்டது. கூட்டெரு செற்திட்டத்திறக்காக 2017 ஆம் ஆண்டின் போது 05 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பின்னர் அவற்றுள் மூவர் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்நதனர். எஞ்சிய இருவருக்கும் மேற்பார்வையாளருக்கும் கழிவு நிலையத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 242,687 மற்றும் ரூபா 1,135,844 தொகையுமாக ரூபா 1,378,631 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கூட்டெரு நிலையத்தின மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களுக்காக வருடமொன்றிற்கு ரூபா 20,000 இற்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முறையான கழிவு முகாமைத்துவ நடைமுறையொன்றிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | திண்மக் கழிவு நிலையத்திற்கு நாளாந்தம் சேர்கின்ற உக்கக்கூடிய 01 டிரெக்டர் கழிவானது நிலையத்தில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டு, பகுதியளாக பிரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் ஹலர் இயந்திரமொன்று, கட்டர் இயந்திரமொன்று கிடைத்தது. எனினும் நிலையமானது பிரதான வீதிக்கு சுமார் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அந்த பிரதேசத்தின் மிகவும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. நீரினை பெற்றுக்கொள்ள முடியாமையால் கூட்டெரு உற்பத்தியினை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஹலர் இயந்திரத்திற்காக தொடர்ச்சியான மின் விநியோகத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அதற்காக 35m அளவான வயர்கள் கொள்வனவு செய்யப்பட்டு அந்த இயந்திரத்தினை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(ஈ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 2030 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது பச்சை வலய அபிவிருத்தி, இழைய நடுகை, சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்கள், பெண்களின் முன்னேற்ற செயற்திட்டங்கள், தாய் சேய் பிணியாய்வு அங்கவீனமுற்ற நபர்களுக்கான மற்றும் சிறுவர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள், போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றை தடுத்தல் போன்றவற்றுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டு முதல் 2030 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியினு் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆக கைத்தொழில்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இன் கீழ் வீதிகளின் அபிவிருத்தி மற்றும் வீதி விளக்குகளின் அலங்காரம், மக்கள் சந்தைகள் மற்றும் வியாபார தொகுதிகளை நடாத்தி செல்லல், தரமான கல்வி போன்ற நோக்கங்களின் கீழ் முன்பள்ளிகளை நடாத்திச் செல்லல், பச்சை வலய அபிவிருத்தி, இழைய நடுகை, சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்கள், பெண்களின் முன்னேற்ற செயற்திட்டங்கள், தாய் சேய் பிணியாய்வு அங்கவீனமுற்ற நபர்களுக்கான மற்றும் சிறுவர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள், போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றை தடுத்தல் போன்றவை தொடர்பிலும் கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்தப்படடுள்ளது என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப்பிரதேசத்தில் 24 தொலைபேசி நிலைமாற்றல் கோபுரங்களின் பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், சபையிடம் எறநத ஆவணமும் காணப்படவில்லை. 1597/8 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின பிரகாரம் உரிய முன் ஆயத்த கட்டணங்கள் அறவிடப்பட்டிராமையால் அவை அத்துமீறிய நிர்மாணங்களாக அவதானிக்கப்பட்டன. வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் கோபுரத்தினை அமைத்த நிறுவனத்திடமிருந்து அறவிட்டிருந்த போதிலும், அந்த கோபுரங்களின் மூலம் தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஏனைய தொலைத்தொடர்பு நிறுவனங்களின் வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பான தகவல் உள்ளடங்கிய ஆவணமொன்று சபையிடம் காணப்படாததுடன், தொலைபேசி நிலைமாற்றல் கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசி நிலைமாற்றல் உபகரணங்கள் தொடர்பில் சரியான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டினுள் சபைக்கு சொந்தமான ஆதனங்கள் மற்றும் வியாபார உரித்துக்கள் 14 கேள்வியிடப்படாமையால் ஆகக் குறைந்த விலைக்கேள்வியான ரூபா 1,132,796 ஆன தொகை சபைக்கு இழப்பாகியிருந்தது. | சபையின் வருமானத்திற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 102 ஆக இருந்ததுடன், 108 பேர் சேவையில | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிகத் | அமைய / பதலீட்டு அடிப்படைகளில் 19 பேர் |

| | | |
|---|---|---|
| ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கமைய அமைய / பதலீட்டு பதவிகளில் 06 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து விலகி இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | தொகைக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த வருடங்களில் சேவையிலிருந்து இடை விலகிய, இடமாற்றம் பெற்றுச் சென்ற, உயிரிழந்த, ஓய்வு பெற்ற மற்றும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 10 ஊழியர்களிடமிருந்து ரூபா 273,774 கடன் மீதி அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் தொகைகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவையிலிருந்து இடை விலகிய, இடமாற்றம் பெற்றுச் சென்ற, உயிரிழந்த, ஓய்வு பெற்ற மற்றும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்கள் மூலம் அறிவித்து குறித்த உத்தியோகத்தர்கள் அறவிட்டு மற்றும் குறித்த பிணையாளர்களிமும் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சியதை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஏக்கர், 02 ரூட், 25.4 பேர்ச் அளவான செலங்கு நாடு எனும் இடத்தின் 51 காணித் துண்டுகளை கொண்ட திட்டமொன்று 2018 மார்ச் 09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. திட்டத்தின் பிரகாரம் 02 ரூட், 05 பேர்ச் பரப்பளவான 29 ஆம் இலக்க காணியின் பகுதி பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இது | பொது வசதிகளுக்கான காணியின் பகுதியை சபைக்கு சுவீகரிக்க வேண்டும். | சபைக்கு அந்த காணியில் பெற வேண்டிய அளவானது உரித்துறுதியொன்றின் மூலம் சுவீகரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

உரித்துறுதியின் மூலம் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 165,500 பெறுமதியான 02 நீர் பௌசர்கள் பயன்படுத்தப்படாமல் பிரதான அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 540,360 பெறுமதியான இயந்திர உபகரண இருப்பொன்று விளைவற்றுக் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை கைத்தவிரப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 நீர் பௌசர்களுக்காக இலக்கம் இல்லாதிருந்தமையால் அது பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் ஏலமிடுவதாகவும், மற்றைய இயந்திரத்தினை குறிப்பாக இனங்கண்டு ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.6 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான டிரெக்டர் மீளாய்வாண்டின் போது ரூபா 766,700 செலவிடப்பட்டு என்ஜின் முழுமையாக பழுதுபார்க்கப்பட்டிருந்தது. பழுதுபார்க்கப்பட்டு சில மாதங்கள் கடந்த பின்னர் மீண்டும் என்ஜினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்த்தல் தொடர்பில் உரிய கராஜ் உடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாததுடன், பழுதுபார்க்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட திகதி முதல் வருடமொன்றிற்காக என்ஜினுகாக உத்திரவாதம் வழங்குவதற்கு இணங்கிய கராஜிடமிருந்து கடிதமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த காலப்பகுதியினுள் மேலதிக கொடுப்பனவொன்றில்லாது பழுதுபார்க்கும் சந்தர்ப்பத்தினை சபை இழந்திருந்தது. பழுதுபார்க்கும் | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பழுதுபார்த்தல் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை என தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடும் ஆவணத்தை தேடிக்கொள்ள முடியாதுன்னதெக தாழ்மைடன் அறிவிக்கின்றேன். ஸ்டியரின வீல் ஒன்று பொருத்தப்படுதல் தொடர்பில் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், பொருத்தப்பட்டிருந்தது பழைய ஒன்றாகும். |

பற்றுச்சீட்டின் பிரகாரம் புதிய ஸ்டியரின் வீல் ஒன்றுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டிருந்தது பழைய ஒன்றாகும். ஏனைய இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வர்ணம் தீட்டுவதற்கு முன்னர் இயந்திர பொறியியலாளர் பரிசோதித்திருக்கவில்லை.

## 3.7 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரவு பகல் கூடைப்பந்து விளையாட்டுத்திடலுக்காக சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொள்ளாது ஒப்பந்ததாரர் ஒருவர் பெறுகை நடைமுறையிலிருந்து விலகி தெரிவு செய்யப்பட்டு 2018 நவம்பர் 30 ஆந் திகதியளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அத்திவாரம் Plinth beam வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் ஒருவர் பெறுகை நடைமுறையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட வேண்டும். | மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 2,282,808 ஆகும். இது சமாதி வயோதிப சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் பொது மக்களின் நலன்களுக்காக மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட 58 விடயங்களின் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,710,000 தொகையான மொத்த நிதி சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய சேவைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி திட்டத்தின பிரகாரம் சிற்சில செயற்திட்டங்களுக்காக சபையின் பணம் செலவிடப்படாது ஏனைய நிறுவனங்கள் மற்றும் நிதியங்களின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டமையால் சபையின் பணம் செலவினத் தலைப்புகளில் சேமிக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப்படுகின்றது. பாதீட்டு மதிப்பீடுகளின் |

| | | |
|---|---|---|
| | | பிரகாரம் பிரதான பெறுவனவுகள் மற்றம் ஏனைய பெறுவனவுகள் போதுமானதாக இல்லாதிருந்தமை மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காகய்வினை மேலும் பலப்படுத்தி உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அனைத்து நிதிக் செயற்பாட் பணிகளும் உள்ளக கட்டுப்பாட் நடைமுறைகளினூடாக பரிசோதிக்கப்படும். எதிர்காலத்தில் நிலவும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |